கட்டக்கூடாது. கட்சி ரீதியான மாநாடு போல் காட்சியளிக்கக் கூடாது' என்று தலைவர் கறாராக உத்தரவிட்டார். அதற்கு முக்கியக் காரணமே 'இது தி.மு.க. மாநாடு அல்ல. உலகத் தமிழர்களுக்காகப் போடப்படும் மாநாடு' என்ற மெஸேஜ் உலகமெங்கும் இருந்து வரும் தமிழறிஞர்கள் மனதில் பதியட்டும் என்பதற்காகத்தான். அதே போல் பல்வேறு நாடுகளில் இருந்து குறிப்பாக கனடா, மலேஷியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இருந்து வந்துள்ள தமிழறிஞர்கள் ஆய்வுக் கட்டுரைகளைத் தாக்கல் செய்துள்ளார்கள். உலகத் தமிழறிஞர்கள் பெருமளவில் கட்டுரைகளைக் கொடுத்து கலந்து கொண்டிருப்பதால் இம்மாநாட்டில் தமிழுக்கும், தமிழர்களுக்கும் கிடைக்கும் முக்கியத்துவத்தை மற்ற நாட்டு அறிஞர்களும் உணர்வார்கள். ஆகவே உலகமெல்லாம் இருக்கும் தமிழர்களுக்கு எங்கள் தலைவர்தான் 'தமிழினத் தலைவர்' என்ற கருத்து மாநாட்டில் பங்கேற்றுள்ள தமிழறிஞர்கள் மனதிலும் பதிவாகும்" என்றவர், "இதை மனதில் வைத்துதான் 'தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும்-எம் இனத்தின் ஒற்றுமைக்கும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு உறுதுணையாக இருக்கும் என்று நம்புகிறோம், வாழ்த்துகின்றோம்' என்று விடுதலைப் புலிகள் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையினை வரவேற்றார் முதல்வர். அதுமட்டுமின்றி 'அந்த அறிக்கையில் அடங்கியுள்ள எதிர்பார்ப்புகளிலும், குறிக்கோள்களிலும் எங்களுக்கு எள்ளளவும் வேறுபாடு இல்லை' என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். இவை எல்லாமே உலகத் தமிழர்களுக்கு எங்கு பிரச்சினை என்றாலும் குரல் கொடுக்கும் தலைவர் எங்கள் தலைவர்தான் என்பதை வெளிப்படுத்துகிறது. அதற்கு இந்த உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு உதவியிருக்கிறது. குறிப்பாக இலங்கைத் தமிழர் பிரச்சினையில் எங்கள் தலைவர் மத்திய அரசுக்கு அதிக அழுத்தம் கொடுக்கத் தவறி விட்டார் என்ற குற்றச்சாட்டுகளை எதிர்க்கட்சிகள் முன் வைத்தன. ஆனால் எங்கள் தலைவரோ சமீபத்தில் இலங்கை அதிபர் ராஜபக்சே இந்திய சுற்றுப்பயணம் வந்த போது பிரதமருக்கும், மத்திய அரசுக்கும் கடுமையான பிரஷ்ஷர் கொடுத்தார். அதன் விளைவாக தி.மு.க. மற்றும் காங்கிரஸ் எம்.பிக்கள் குழு இலங்கை அதிபரை சந்தித்தது. 'இலங்கைத் தமிழர்களுக்கான அதிகாரப் பகிர்வு குறித்த அந்நாட்டின் 13வது அரசியல் சட்ட திருத்தத்தை அமல்படுத்த வேண்டும்' என்று இந்தியா கறாராகச் சொன்னது. ஆனால் சுற்றுப்பயணம் வந்திருந்த ராஜபக்ஸே, 'அது என் எதிர்கால தேர்தலை இலங்கையில் பாதிக்கும். என் கட்சிக்கு ஆபத்தாக முடிந்து விடும்' என்றாராம். ஆனால் கலைஞர் கொடுத்த அழுத்தத்தின் விளைவாக 'அந்த அரசியல் சட்டப் பிரிவுகளை அமல்படுத்துவேன்' என்று ராஜபக்சே ஒப்புக்கொண்டதோடு மட்டுமின்றி, அதை இலங்கை-இந்திய கூட்டு அறிக்கையிலும் இடம் பெற சம்மதித்தார். இப்படிப்பட்ட சூழ்நிலையில் கோவையில் உலகத் தமிழ் செம்மொழி மாநாடு நடத்துவது உலகமெல்லாம் உள்ள தமிழர்களுக்கு தமிழகம் என்றும் துணை நிற்கும் என்பதை வெளிப்படுத்தவே" என்றார் உணர்ச்சிகரமாக.



இதே ரீதியில் தி.மு.க.விற்கும் இந்த மாநாட்டினால் 'கூட்டணிப் பலன்கள்' கிட்டியுள்ளது என்று கூறும் மூத்த தி.மு.க. அமைச்சர் ஒருவர், "கட்சி சார்பற்ற மாநாடு என்று தலைவர் அறிவித்தார். அதை மெய்பிக்கும் வகையில் காங்கிரஸ், பா.ம.க., பா.ஜ.க., மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, திராவிடர் கழகம் என்று முக்கியக் கட்சிகளின் தலைவர்களை இந்த மாநாட்டு மேடைக்குக் கொண்டு வந்துள்ளார் கலைஞர். அதுவும் குறிப்பாக 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்ற தலைப்பின் கீழ் ஒருங்கிணைத்துள்ளார். குறிப்பாக காங்கிரஸைச் சார்ந்த தங்கபாலு, மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த சீத்தாராம் யெச்சூரி, பா.ஜ.க.வின் இல.கணேசன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் டி.ராஜா போன்றவர்களை ஒரே மேடைக்குக் கொண்டு வருவது கலைஞர் போன்ற கைதேர்ந்த அரசியல்வாதியால் மட்டுமே முடியும். அகில இந்திய அளவில் காங்கிரஸும், கம்யூனிஸ்டுகளும் கூட்டணியாக இல்லாவிட்டாலும் தமிழகத்தைப் பொறுத்தவரை 'தமிழுக்காகக்' கூட்டணியாக இருப்பது அனைவரையும் சிந்திக்க வைக்கும் விஷயம்.

இது ஒருபுறமிருக்க, காங்கிரஸின் சார்பில் ஜி.கே.வாசன், ப.சிதம்பரம், பிரணாப் முகர்ஜி ஆகியோர் இம்மாநாட்டில் பங்கேற்பது இன்னொரு ஹைலைட்! இந்த விதத்தில் பார்த்தால் எங்கள் தலைவர் காங்கிரஸ் உள்ளிட்ட தன் கூட்டணிக் கட்சிகளையும் பக்கத்தில் வைத்துக் கொண்டுள்ளார். அதே நேரத்தில் எங்கள் தலைவர் நினைத்தால் கம்யூனிஸ்டுகளையும், காங்கிரஸையும் ஒரே அணியில் கொண்டு வர முடியும் என்பதையும் நிரூபித்து இருக்கிறார். இந்த வகையில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு 'கூட்டணித் தலைவர்' என்ற இமேஜை முதல்வருக்கு பெற்றுத் தந்துள்ளது" என்று குறிப்பிட்டார்.

அவரே மேலும் கூறுகையில், "பிரணாப் முகர்ஜியும், ப.சிதம்பரமும் இந்த மாநாட்டில் பங்கேற்பதில் சில முக்கிய விஷயங்கள் இருக்கின்றன. சிதம்பரம் முன்பு 'ராஜீவ்-ஜெயவர்த்தனே' ஒப்பந்தம் உருவாகியபோது 13வது அரசியல் சட்டத் திருத்தங்களின் அடிப்படையில் தமிழர்களுக்கு அதிகாரம்